# <u>இயல்பு கூட்டப்பொருட்கள்</u>

1. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான J.CB இயந்திரத்திற்கு (TN74M8116) மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி இன்ஜின் ஆயில், கியர் ஆயில், பில்டர் ஷீட்கள், பியரிங், ஹப்பியரிங் ஹிட், ஹோஸ்லியர்பேட், போன்றவை மாற்றவும், தொடர்புடைய இதர பணிகள் செய்யவும் உதவி பொறியாளர் மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோர் ஒப்புதலளித்துள்ளதின் பேரில் மேற்படி பணிகளை செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.62,000/-ற்கும் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்டரான "ஜெயராஜ் ஆட்டோமொபைல் ஏஜென்ஸி, நாகர்கோவில்" நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு 'பணி உத்தரவு' வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.17975/2016/எச்4

## தீர்மானம் எண்.385 – அங்கீகரிக்கப்பட்டது

2. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான கனரக வாகனம் TN74 L 5160 பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வருகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதாலும், மின்லப்பெட்டி (Battery) கழிவு செய்யவேண்டிய நிலையில் இருப்பதாலும் புதிதாக மின்கலப்பெட்டி ஒன்று வாங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.7500/-ற்கும், மாநகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்வதற்கும் விலைப்புள்ளி கோரவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3451/2016/எச்4

## தீர்மானம் எண்.386 – அங்கீகரிக்கப்பட்டது

3. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனமான கழிவுநீர் லாரி (Sullage Lorry) TN74D 0199-ற்கு வருடாந்திர தகுதிச்சான்று புதுப்பிக்க ஏதுவாக (Fitness Certificate Renewal) மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய வாகன ஓட்டுநர் பட்டியலுடன் கூடிய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்புதலை இம்மாநகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் மாநகர பொறியாளர் ஆகியோர்கள் வழங்கியுள்ளார். எனவே சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.99,000/-ற்கும், இம்மாநகராட்சி பொது நிதியில் செலவினத்தை மேற்கொள்வதற்கும், மன்ற ஒப்புதலை வேண்டியும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.20366/2016/எச்4

## தீர்மானம் எண்.387 – அங்கீகரிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN74 AC 8049 (Dumper Placer Lorry) டம்பர் பின்கள் மூலம் கழிவுகள் அகற்றும் பணியை மேற்கொண்டு வந்தது. தற்போது நகர் முழுவதும் டம்பர் பின்கள் அகற்றப்பட்டுவிட்டதாலும், கழிவுகள் அகற்றும் பணியினை டிப்பர் ஆட்டோ மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேற்படி டம்பர் பிளேசர் லாரிகள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. எனவே தற்காலிக பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேற்படி லாரிகளை ஓபன் லாரிகளாக (Open Lorry) மாற்றுவதற்கம் இதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000 லட்சத்திற்கும் மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் E-Tender கோரவும், விளம்பரச் செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5762/2020/எச்4

## தீர்மானம் எண்.388 – அங்கீகரிக்கப்பட்டது

5. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN74 AC 8029 (Dumper Placer Lorry) டம்பர் பின்கள் மூலம் குப்பைகள் அகற்றும் பணியை மேற்கொண்டு வந்தது. தற்போது நகர் முழுவதும் டம்பர் பின்கள் அகற்றப்பட்டுவிட்டதாலும், கழிவுகள் அகற்றும் பணியினை Tipper Auto க்கள் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேற்படி டம்பர் பிளேசர் லாரிகள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. எனவே தற்காலிக பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேற்படி லாரிகளை ஓபன் லாரிகளாக (Open Lorry) மாற்றுவதற்கம் இதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000 லட்சத்திற்கும் மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் E-Tender கோரவும், விளம்பரச் செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5762/2020/எச்4

## தீர்மானம் எண்.389 – அங்கீகரிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN74L5137 (Open Lorry) மூலம் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய அமைப்பில் கழிவுகளை கொட்டுவதில் மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்தினை TIPPER லாரியாக மாற்றுவதற்கும், பழுதாகியுள்ள பிளாட்பார்ம்-னை மாற்றவும், Sidewall பழுதடைந்து உள்ளதால் Bady Construct செய்யவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.5,20,000/-ற்கும், மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் E-Tender கோரவும், விளம்பரச் செலவினங்களுக்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5762/2020/எச்4

## தீர்மானம் எண்.390 – அங்கீகரிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட வட்டவிளை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இன்வெட்டர் வாங்கிட விலைப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | Samariya Systems,<br>Distillary Road,<br>Nagercoil | ரூ.34,400/- |
| 2 | M/s. Sharon Batteries<br>Ramanputhur | ரூ.35,600/- |
| 3 | M/s. JP Marketers<br>Parvathipuram | ரூ.36,100/- |

பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள M/s.Samariya Systems, Nagercoil நிறுவனம் ரூ.34,400/-க்கு கொடுத்துள்ளதை ஏற்கவும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கிடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1/2020/இ4

## தீர்மானம் எண்.391 – அங்கீகரிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சி பொதுசுகாதார பிரிவில் பணியாற்றி வரும் கீழ்காணும் பணியாளர்களுக்கு 2019-2020-ம் ஆண்டிற்கான சீருடை துணி வழங்கப்படவேண்டும்

| | | |
|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் (ஆண்) | 140 நபர்கள் |
| 2 | தூய்மை பணியாளர்கள் (பெண்) | 85 நபர்கள் |
| 3 | மகப்பேறு ஆயா | 3 நபர்கள் |
| 4 | தூய்மை பணிமேற்பாவையாளர்கள் | 13 நபர்கள் |
| 5 | துலக்குநர் | 1 நபர்கள் |

மேற்கண்டுள்ள பணியாளர்களுக்கு அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து சீருடை துணி மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு காலணிகள் வாங்கவும், அதற்குண்டான தையற்கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/- லட்சத்திற்கு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5443/2020/எச்4

## தீர்மானம் எண்.392 – அங்கீகரிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சியில் ஆணையாளர் பயன்பாட்டு வாகனம் எண்.TN74 AU 6969-க்கு VIP Revolving Light பொருத்தியதற்குண்டான செலவுத்தொகை ரூ.5876/-க்கு (ஐயாயிரத்தி எண்ணூற்றி எழுபத்தி ஆறு) அனுமதியும் திரு.M.சிவக்குமார் என்பவருக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி தொகையினை வழங்கிடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1767/2012/இ2

## தீர்மானம் எண்.393 – அங்கீகரிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 J 2839-ற்கு புதிய மின்கலப்பெட்டி வாங்கி பொருத்துவதற்கு 29.06.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | Ashwin Battery Service<br>Nagercoil | Rs.5000/- |
| 2 | Chellam Battery Works<br>Nagercoil | Rs.5500/- |

மேற்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Ashwin Battery Service, Nagercoil தொகை ரூ.5000/- (ஐந்தாயிரம்) கொடுத்துள்ளதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்கிடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5021/2006/இ2

## தீர்மானம் எண்.394 – அங்கீகரிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 D 2036-ற்கு தகுதி சான்று பெறுவதற்கும் பழுது பணிகள் சரி செய்ய 29.07.2020 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு..

| | | |
|---|---|---|
| 1 | ARK Automobiles<br>Nagercoil | Rs.77210/- |
| 2 | Mathava Motors<br>Vellamadaum | Rs.82580/- |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.77210/- (எழுபத்தி ஏழாயிரத்தி இருநூற்றி பத்து மட்டும்) ARK Automobiles, Nagercoil வழங்கியதை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10428/2017/இ2

## தீர்மானம் எண்.395 – அங்கீகரிக்கப்பட்டது

12. இம்மாநகராட்சியில் புதிய அறிவிப்பு பலகை மற்றும் காணொளி கண்காட்சி அறைக்கு LED FOCUS Light அமைத்த வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,500/-க்கு (இருபத்தி இரண்டாயிரத்தி ஐநூறு) அனுமதியும், மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.V.ஜோசப் அருள்ராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விலை விகிதம் (ரூ.22,200/-) |
| 2 | திரு.V.டேவிட் மைக்கேல் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விட 8.11% அதிகம் (ரூ.24,000/-) |

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.V.ஜோசப் அருள்ராஜ் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்கவும், மன்ற ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கிடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4006/2020/இ1

## தீர்மானம் எண்.396 – அங்கீகரிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனமான Compactor Lorry TN74 AS 5646-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக சரி செய்ய வேண்டியுள்ளதால் 22.05.2020 அன்று 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| | வாகன எண் TN74 AS 5646 (Compactor Lorry) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|
| | | AKSHAYA MOTORS Rate | GANESH MOTOR WORKS Rate |
| 1 | TN74 AS 5646 | 49560/- | 48380/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Ganesh motor works, Nagercoil என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது என்பதால் அதனை ஏற்கவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு 'பணி உத்தரவு' வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.878/2019/எச்4

## தீர்மானம் எண்.397 – அங்கீகரிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனங்களில் (டிப்பர் ஆட்டோ) ஏற்பட்டுள்ள பழுதுகளை தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக சரி செய்ய வேண்டியுள்ளதால் 22.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | வாகன எண் (டிப்பர் ஆட்டோ) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|
| | | AKSHAYA MOTOR WORKS RATE | GANESH MOTOR WORKS RATE |
| 1 | TN74 AQ 1558 | 24,308/- | 23,187/- |
| 2 | TN74 AQ 1591 | 33,394/- | 31,919/- |
| 3 | TN74 AQ 1595 | 36,792/- | 35,695/- |
| 4 | TN74 AQ 1600 | 39,943/- | 39,884/- |
| 5 | TN74 AQ 1621 | 39,483/- | 39,412/- |
| 6 | TN74 AQ 1647 | 34,279/- | 33,276/- |
| 7 | TN74 AQ 1648 | 39,672/- | 39,530/- |
| 8 | TN74 AQ 1662 | 36,993/- | 35,518/- |
| 9 | TN74 AQ 1681 | 39,896/- | 39,648/- |
| 10 | TN74 AQ 1706 | 33,618/- | 32,627/- |
| 11 | TN74 AQ 1749 | 39,707/- | 38,645/- |
| 12 | TN74 AQ 1842 | 38,881/- | 37,819/- |
| 13 | TN74 AQ 1845 | 31,801/- | 29,913/- |
| 14 | TN74 AQ 1870 | 29,087/- | 27,388/- |
| 15 | TN74 AQ 1904 | 39,589/- | 37,937/- |
| 16 | TN74 AQ 1913 | 33,866/- | 32,155/- |
| 17 | TN74 AQ 1924 | 39,967/- | 39,766/- |
| 18 | TN74 AQ 1728 | 39,943/- | 38,763/- |
| 19 | TN74 AQ 1893 | 39,831/- | 39,707/- |
| 20 | TN74 AQ 1768 | 37,052/- | 35,813/- |
| | | MATHVA MOTORS | GANESH MOTOR WORKS |
| 21 | TN74 AQ 1743 | 36,580/- | 35,400/- |
| 22 | TN74 AQ 1707 | 38,350/- | 58,764/- |
| 23 | TN74 AQ 1762 | 27,376/- | 30,503/- |
| 24 | TN74 AQ 1938 | 37,937/- | 46,197/- |
| 25 | TN74 AQ 1604 | 32,570/- | 36,993/- |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 21 வரை குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள GANESH MOTOR WORKS நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வ.எண்.22 முதல் 25 வரை குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Madava Motors, Vellamadam நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் அங்கீகாரத்திற்கு. மேலும் அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்தார்க்கு 'பணி உத்தரவு' வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1360/2019/எச்4

**தீர்மானம் எண்.398 – அங்கீகரிக்கப்பட்டது**

15. இம்மாநகராட்சிக்குட்பட்ட கணேசபுரம் மார்க்கெட் மற்றும் வடசேரி பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள இடங்களில் கோவிட்-19 தீவிரமாக பரவுவதை தடுக்கும் விதமாக தற்காலிக தடுப்புச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.36,000/- (முப்பத்தி ஆறாயிரம்) -க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு -15-ன் கீழ் மேற்படி பணியினை EBK பில்டர்ஸ் என்பவர் மூலம் செய்து முடிக்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.15699/2020/இ1

## தீர்மானம் எண்.399 – அங்கீகரிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதியான டெரிக் சந்திப்பில் உள்ள மட்டன் ஸ்டால் அருகே உள்ள மழைநீர் வடிகால் ஓடையினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,10,000/-க்கு (மூன்று லட்சத்தி பத்தாயிரம்) அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5764/2020/இ1

## தீர்மானம் எண்.400 – அங்கீகரிக்கப்பட்டது

17. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் ஜீவா சாலையில் (IInd Street) -ல் ஏற்கெனவே நிற்கும் பழைய மின் கம்பங்களில் 2 எண்ணம் புதிய தெருவிளக்குகள் பொருத்துவதற்கு இராஜாக்கமங்கலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து கேட்பு தொகை ரூ.36,390/- (முப்பத்தி ஆறாயிரத்தி முன்னூற்றி தொண்ணூறு) -ஐ செலுத்த கேட்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தொகையினை மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மின்சார வாரியத்திற்கு செலுத்திடவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1/2020/இ4

## தீர்மானம் எண்.401 – அங்கீகரிக்கப்பட்டது

18. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கோட்டார் பாரவுந்து நிலையத்தில் வந்து செல்லும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்திடும் ஆண்டு குத்தகை இனம உரிமத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு குத்தகைதாரர் உரிமத் தொகை செலுத்தப்படவில்லை. எனவே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை நாள்.19.06.2020-இன் படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கொரோனோ வைரஸ் நோய் தொற்று காரணமாக மாநகராட்சி நிர்வாக நலன் கருதியும், பொது நலன் கருதியும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டது.

கொரோனோ வைரஸ் நோய் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வாகன போக்குவரத்து இல்லாததால் 01.04.2020 முதல் கட்டணம் வசூல் செய்ய இயலாத நிலையில் தற்போது ஊரடங்கில் சில தளர்வுகளின் அடிப்படையில் வாகன போக்குவரத்து துவங்கியுள்ளது. எனவே கோட்டார் பாரவுந்து நிலையத்திற்கு தற்போது வந்து செல்லும் வாகனங்களுக்கு மாநகராட்சி வருவாய் நலன் கருதி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு உரிமம் ஒப்படைக்கும் வரையில் மூன்று / நான்கு சக்கர இலகுரக வாகனத்திற்கு ரூ.40/- வீதம் மற்றும் கனரக வாகனங்களுக்கு ரூ.50/- வீதம் மாநகராட்சி பணியாளகளை கொண்டு துறை மூலம் கட்டணம் வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1266/2017/அ8

**தீர்மானம் எண்.402 – 17.08.2020 முதல் துறை மூலம் கட்டணம் வசூல் செய்து வருகிறது. அங்கீகரிக்கப்பட்டது**

19. சுமார் மூன்று இலட்சம் மக்கள் தொகையை கொண்டிருக்கும் இம்மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மாநகராட்சிக்குச் சொந்தமான (33) வாகனங்கள் மூலமாகவும், தனியார் வாகனங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி வாகனங்கள் இம்மாநகராட்சியின் மூலை முடுக்குகளிலெல்லாம் சென்று வருகின்றனவா என்பதை கண்காணிக்கவும், பொதுமக்களின் சேவையில் சிறப்பாக ஈடுபடுகின்றனவா என்பதை அறிவதற்காகவும் அனைத்து வாகனங்களிலும் GPS கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிப்பது உகந்ததாக இருக்கும் என்பதால் ஏற்கெனவே 'Softbery Solutions, Karaikudy' நிறுவனத்தார் மூலம் சோதனை அடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு தற்போதும் நடைமுறையில் உள்ளது.

மேற்படி நிறுவனத்தின் சேவை திருப்திகரமாக இருப்பதால் கூடுதலாக ஓராண்டிற்கு (8/2021 வரை) ஏற்கெனவே வழங்கப்பட்ட ஒப்பந்த நிரக்கில் (Rafe) பணி செய்திட உத்தரவு வழங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.6 லட்சம் (ஆறு இலட்சம்) பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி சம்மந்தப்பட்ட நிறுவனத்தார்க்கு 'பணி உத்தரவு' வழங்கியதையும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.12405/2018/எச்4

**தீர்மானம் எண்.403 – அங்கீகரிக்கப்பட்டது**

20. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது 06.01.2020 தேதிய ஆய்வு கூட்டத்தில், நாகர்கோவில் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகளை 14-வது மத்திய நிதிக்குழு மானியத்தில் சீர்செய்திட அறிவுறுத்தப்பட்டதின்படி, மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியர் அவர்களின் அறிவுரைப்படியும், இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, டிஸ்லரி சாலையில் தார்தளம் அமைக்க ரூ.25,00,000/- மதிப்பீட்டில் பணி செய்ய மாமன்ற தீர்மானம் எண்.75, நாள்.31.01.2020-ல் அனுமதி பெறப்பட்டு பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு கடந்த 04.02.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சாலையில் அதிகபடியான ஒட்டு பணிகள் (Patch work) இருந்ததை தொடர்ந்து பொது மக்கள் மற்றும் காவல்துறையின் வேண்டுகோள்படி விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அவசர பணியாக கருதி ஒட்டுபணிகள் (Patch work) செய்யப்பட்டு சாலை தற்போது நல்ல நிலையில் இருப்பதாலும், இப்பணிக்கு பதிலாக வார்டு எண்.26, கிறிஸ்துநகர் பிரதான சாலையில் (வெட்டூர்ணிமடம் சந்திப்பு முதல் Water Tank சாலை சந்திப்பு வரை) குடிநீர் குழாய் பதித்தலின் போது மிகவும் சேதமுற்று போக்குவரத்திற்கு ஆபத்தான நிலையில் உள்ளதாலும் பணிகளை அதே மதிப்பீட்டில் செய்திடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.157/2019-2020

## தீர்மானம் எண்.404 – அங்கீகரிக்கப்பட்டது

21. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களிலும் (UPHC) (கிருஷ்ணன்கோயில், வடசேரி, வடிவீஸ்வரம், வட்டவிளை, தொல்லவிளை) COVID-19 தடுப்புபணி தொடர்பான அறிக்கைகள் அரசு அலுவலகங்களுக்கு உடனுக்குடன் கணனி மூலம் தயாரித்து மின்னஞ்சல் மூலம் அனுப்ப புள்ளி விபர தொகுப்பாளர் (Data Entry Operator) தேவைப்படுவதாக மேற்படி சுகாதார மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலகர்கள் (Medical Officers) வேண்டுகோள் கடிதம் சமர்ப்பித்துள்ளனர். எனவே நிலையத்திற்கு ஒருவர் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி (615/-) அடிப்படையில் சுய உதவிக்குழு மூலமாக 8/2020 முதல் நியமனம் செய்யவும், 3 மாதத்திற்கான (10/2020) செலவினம் (615x5x90days)= 2,76,750/-ற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.எச்4/1127/2018

## தீர்மானம் எண்.405 – அங்கீகரிக்கப்பட்டது

22. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் தெரு நாய்களால் தொல்லையாக உள்ளது என பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டதின்படி, இம்மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாக சுற்றிதிரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிட்சை செய்து உணவு வழங்கி, வெறிநாய் தடுப்பு ஊசி போட்டு பிடித்த இடத்தில் விடுவதற்கு நாய் 1-க்கு ரூ.700/- என நிர்ணயம் செய்து, மத்திய அரசின் விலங்குகள் நல வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு 09.07.2019 முதல் 08.07.2020 வரை அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் அனுமதி காலம் 08.07.2020-ல் முடிவடைந்தது. மேலும் சுகாதார ஆய்வாளர்களால் மாநகர பகுதிகளில் தெரு நாய்கள் நடமாட்டம் கூடுதலாக உள்ளது என்பதால், தொடர்ந்து ஓர் ஆண்டிற்கு, நாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பொருட்டு ஒப்பந்தம் நீட்டித்து வழங்க 06.07.2020-ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். அதனை தொடர்ந்து ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிடபுள் டிரஸ்ட் நிறுவனத்தின் 18.07.2020-ம் தேதிய கடிதத்தில், ஏற்கனவே நிர்ணயித்த கட்டணத்தில் நீட்டித்து வழங்க விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு இடையூறாக சாலையில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பிடித்து கருத்தடை செய்து (Animal Birth Control) அதற்கான உணவு வழங்கி, வெறிநாய் தடுப்பு ஊசி போட்டு, பிடித்த இடத்தில் கொண்டு விடுவதற்கான கட்டணம் நாய் 1-க்கு ரூ.700/- விகிதத்தில் 09.07.2020 முதல் ஒரு ஆண்டிற்கு உரிய நிபந்தனைகளுடன் ஒப்பந்தம் நீட்டித்து வழங்கும் பொருட்டு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> –

1. அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் 09.07.2020 முதல் ஓராண்டிற்கு தெரு நாய்கள் கருத்தடை செய்ய (Animal Birth Control) ஒப்பந்தத்தினை நீட்டித்து வழங்கி ஜீவ காருண்யா விலங்குகள் நல சாரிட்டபுள் டிரஸ்ட் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.5367/2019/எச்1

**தீர்மானம் எண்.406 – அங்கீகரிக்கப்பட்டது**

23. இம்மாநகராட்சி வரைபடத்தில் அனைத்து உட்கட்டமைப்புகளான சாலைகள், வாறுகால், தெருவிளக்கு, குடிநீர் விநியோகம் மற்றும் பிரதான குழாய்கள், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பொது நல்லிகள், ஆழ்துளை கிணறுகள், வீட்டு இணைப்புகள், பூங்காக்கள், அனைத்து அரசு அலுவலக கட்டிடங்கள், பாதாளசாக்கடை திட்டம் தொடர்பான அனைத்து உட்கட்டமைப்புகளையும் ஒரே வரைபடத்தில் உள்ளடக்கம் செய்திட மாவட்ட ஆட்சியர் அவர்களின் உயர்மட்ட குழுகூட்ட நடவடிக்கையின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் மாநகராட்சி வரைபடத்தில் அனைத்து உட்கட்டமைப்புகளும்

அடங்கியவரைபடம் தயார் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/-க்கு (இருபத்தைந்து லட்சம்) அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ1/5913/2020

**தீர்மானம் எண்.407 – அங்கீகரிக்கப்பட்டது**

24. இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump House III-ல்லுள்ள 30 HP Submersible Motor பழுதடைந்துள்ளதனை சரிசெய்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.46000/-க்கு (நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ2/5914/2020

**தீர்மானம் எண்.408 – அங்கீகரிக்கப்பட்டது**

25. இம்மாநகராட்சிக்குட்பட்ட (ஒழுகினசேரி) வள்ளி தியேட்டர் பக்கம் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் வேலைக்கு ரூ.1,75,000/-க்கு மன்ற தீர்மானம் எண்.247 நாள்.31.03.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க, மேற்படி பணிக்கு, 17.06.2020 அன்று மின்னணு முறையில் (e-tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.C நாகராஜன், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டைவிட 0.30% குறைவு (ரூ.171265/-) |

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C நாகராஜன் என்பவர் மதிப்பீட்டைவிட 0.30% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ1/14/19-20

**தீர்மானம் எண்.409 – அங்கீகரிக்கப்பட்டது**

26. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC5) அரசாணை (MS) எண்.87 நாள்.19.08.2020-ல் தமிழ்நாடு மாநகராட்சிகளின் பொதுப்பணி விதிகள் 1996-ல் உள்ள இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்தை இளநிலை உதவியாளர் என பெயர் மாற்றம் செய்தும், தட்டச்சர் பணியிடம் தனியாக தோற்றுவித்தும், இளநிலை உதவியாளருக்கான கல்வித்தகுதியை தளர்வு செய்து SSLC (10-ம் வகுப்பு) தேர்ச்சி என பணிவிதிகளை திருத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

<u>அலுவலக குறிப்பு</u> – பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.சி1/5237/2020

**தீர்மானம் எண்.410 – அங்கீகரிக்கப்பட்டது**

27. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட சாலைகளில் பாதாளசாக்கடை திட்ட பணிகள், மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகளில் குழாய் பதித்தல் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி நடைபெறும் சாலைகளில் தோண்டப்படும் ஆழம் ஆனது 2 மீட்டர் முதல் 3 மீட்டர் வரை உள்ளது. பழுது ஏற்பட்ட சாலைகளில் கடுமையான போக்குவரத்து காரணமாக விபத்து ஏற்படாத விதிமாக தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு உபகரணம் (Safety Equipment) வங்கிடவும் அதற்கானதும் உத்தேச செலவினம் ரூ.3,95,000/- பொது நிதியில் செலவிடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – 1).அங்கீகரிக்கலாம்.

2) மேற்படி தொகையினை முறையாக பாதுகாப்பு வசதிகள் செய்யாத தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் AMRUT ஒப்பந்ததாரர் M/s. Thahal PVT Ltd (ம) UGSS ஒப்பந்ததாரர் M/s அபிராம் PVT Ltd அவர்களது பட்டியல் தொகையில் ஈடுசெய்யவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.இ1/6327/2020

**தீர்மானம் எண்.411 – அங்கீகரிக்கப்பட்டது**

28. இம்மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் அமரும் இருக்கைகள் கொரோனா முன்னெச்சரிக்கை Disinfection பணியின் போது பெயின்ட் அனைத்தும் இல்லாது பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலை இருப்பதால் 118 எண்ணம் இருக்கைகள் வர்ணம் பூசி புதுப்பிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.53200/-க்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ1/4513/2020

**தீர்மானம் எண்.412 – அங்கீகரிக்கப்பட்டது**

29. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43-ல் தடி டிப்போ ரோடு 3-வது குறுக்குத் தெருவில் புதிய தெருவிளக்குகள் 4 எண்ணம் பொருத்திடவும், புதிய தெருவிளக்குகள் பொருத்திட ஏதுவாக புதிய மின்பாதை அமைத்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.இ4/1/2020

**தீர்மானம் எண்.413 – அங்கீகரிக்கப்பட்டது**